நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.
நாள் 27/09/2023

## அவசரக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் எதிர்வரும் **2023ம்** வருடம் **செப்டம்பர்** மாதம் **29 ம்** தேதி **வெள்ளி கிழமை** காலை **11.30** மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சிறப்பு கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குரிய பொதிகையடி குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், பொது மக்களுக்குவழங்கக் கூடிய குடிநீர் விநியோகத்திற்காக நீரேற்றம் செய்ய பயன்படுத்தப்பட்டு வந்த 100 HP திறன்கொண்ட மோட்டார் எண் 1 ல் உள்ள மோட்டார் Rotor Shaft தேய்மானம் காரணமாக பேரிங்குகள் பழுதாகியும், காயில் பழுதாகியும் உள்ளது. மேலும் மோட்டார் எண் 2 ல் உள்ள பேரிங் பழுதாகியுள்ளது. மேற்கண்ட இரண்டு மோட்டார்களும் பழுதடைந்த நிலையில் தற்போது குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி, மாற்று மோட்டார் பயன்படுத்தப்பட்டு குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் செய்யும் பணி எவ்வித தடங்களும் இன்றி மேற்கொள்ள வேண்டியும், பணியின் அவசியம் கருதியும், மேற்கண்ட பழுதடைந்த 2 மோட்டர்களையும் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 2.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் பணியன் அவசரம் மற்றும் அவசியம் கருதி,பொதிகையடி நீரேற்று நிலையத்தில் பழுதடைந்துள்ள இரண்டு 100 HP திறன்கொண்ட மோட்டார்களையும், உடன் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 341 / குடிநீர் பணியன் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

, இந்நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை பரமரிக்க வேண்டி ஏற்கனவே 2 மின் கம்பியாளர் மற்றும் 2 உதவியாளர் பணிப்புரிந்து வந்த நிலையில், 1 மின்கம்பியாளர் சமீபத்தில் இயற்கை ஏய்திவிட்டப்படியாலும், 1 உதவியாளர் மாற்று பணியாக தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றும் பணி பார்த்து வருகிறார். தற்போது 21 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை இந்நகராட்சி மின் கம்பியாளர் 1 எண்ணம் மற்றும் பொது சுகாதார பிரிவு பணியாளர் ஒருவரை மாற்று பணியாக பணியமர்த்தி தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட 2 பணியாளர்களை மட்டும் கொண்டு இந்நகர் பகுதியில் உள்ள 1891 தெருவிளக்குகளை பராமரித்தல் மற்றும் இயக்கம் செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இது குறித்து 31.08.2023 நடைபெற்ற நகர்மன்ற கூட்டத்தில் நகர்மன்ற உறுப்பினர்களால் தெருவிளக்கு பராமரிப்பு பணி மிகவும் தொய்வு ஏற்படுகிறது என புகார் தெரிவிக்கப்பட்டது. மேலும் துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் இந்நகராட்சி பகுதி முழுவதும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், தெருவிளக்கு பராமரிப்பு பணிக்காக பெறப்பட்ட ஒரு பணியாளரையும் திரும்ப பொது சுகாதார பிரிவிற்கே மாற்றம் செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.அவ்வாறு மேற்கண்ட பொது சுகாதார பணியாளரையும் திரும்ப பொது சுகாதார பிரிவிற்கே அனுப்பப்படும் நிலையில், நகராட்சி பொறியிற் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாமல் தெருவிளக்க பராமரிப்பு பணி மேலும் பாதிப்படையும் நிலை உள்ளது. எனவே தெருவிளக்கு பராமரிப்பு பணி மேலும் எவ்வித பாதிப்பும் ஏற்டா வண்ணம், கீழ்க்கண்ட விவரப்படி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட வேண்டி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.15/–

இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் , பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

| தேவைப்படும் பணியாளர்கள் | | தற்போது பணிப்புரிந்து வரும் பணியாளர்கள் | | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| மின்கம்பியாளர் | உதவியாளர் | மின்கம்பியாளர் | உதவியாளர் | மின்கம்பியாளர் | உதவியாளர் |
| 2 | 2 | 1 | 1 (பொது சுகாதாரப்பிரிவு பணியாளர்) | 1 (தகுதிவாய்ந்த ஐடிஐ கல்வி தகுதியுடன்) | 2 |

**அலுவலகக்குறிப்பு**

தெருவிளக்கு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், பொது நலன் கருதியும், இந்நகர் பகுதியில் உள்ள 1891 தெருவிளக்குகளையும் உடனுக்குடன் சரி செய்து பணி மேற்கொள்ள வேண்டி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.15/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 342 / தெருவிளக்கு பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதிமன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி குடிநீர் விநியோக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் இருந்து நாள் தோறும் குடிநீர் விநியோகம் செய்திட போதிய குடிநீர் விநியோக பணியாளர்கள் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்படாத நிலையில், அதற்கான 7 பணியாளர்களும், தலைமை நீரேற்று நிலையத்திற்கு 1 பணியாளரும் ஆக மொத்தம் 8 பணியாளர்கள் பொது சுகாதார பிரிவில் இருந்து மாற்று பணி அடிப்படையில் பணிப்புரிந்து வருகின்றனர். தற்போது துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பில் இந்நகராட்சி பகுதி முழுவதும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், குடிநீர் பராமரிப்பு பணிக்காக பெறப்பட்ட 8 பணியாளரையும் திரும்ப பொது சுகாதார பிரிவிற்கே மாற்றம் செய்ய கேட்டுக்கொண்டுள்ளார். அவ்வாறு மேற்கண்ட 8 பொது சுகாதார பணியாளரையும் திரும்ப பொது சுகாதார பிரிவிற்கே அனுப்பப்படும் நிலையில், நகராட்சி பொறியியற் பிரிவில் போதிய பணியாளர்கள் முற்றிலும் இல்லாநிலை ஏற்பட்டு குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கக்கூடிய குடிநீர் விநியோகம் பாதிப்படையாமல் இருக்க வேண்டி கீழ்க்கண்ட விவரப்படி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட வேண்டி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.30/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் , பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**தலையணை தலைமை நீரேற்று நிலையத்திற்கு**

| தேவைப்படும் திறனற்ற மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | தற்போது பணிப்புரிந்து வரும் பொறியியற் பிரிவு அல்லாத பொது சுகாதார பிரிவி பணியாளர்களின் எண்ணிக்கை | ஈடு செய்ய தேவைப்படும் திறனற்ற பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2 | 1 | 1 |

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் தரை மட்ட நீர்தேக்கத் தொட்டி இயக்குதல் மற்றும் குடிநீர் விநியோகம் செய்தல்**

| தேவைப்படும் திறனற்ற மொத்த பணியாளர்களின் | தற்போது பணிப்புரிந்து வரும் பொறியியற் பிரிவு மற்றும் | ஈடு செய்ய தேவைப்படும் திறனற்ற பணியாளர்களின் |
|---|---|---|

<table>
<tr><td rowspan="2">எண்ணிக்கை</td><td colspan="2">பொறியியற் பிரிவு அல்லாத பொது சுகாதார பிரிவி பணியாளர்களின் எண்ணிக்கை</td><td rowspan="2">எண்ணிக்கை</td></tr>
<tr><td>பொறியியற் பிரிவு</td><td>பொதுசுகாதாரப்பிரிவு</td></tr>
<tr><td>11</td><td>4</td><td>7</td><td>7</td></tr>
</table>

<u>அலுவலகக்குறிப்பு</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொறியியற் பிரிவில் போதிய திறனற்ற பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்படாத நிலையில் ஏற்கனவே மாற்று பணி மேற்கொண்டு வரும் 8 பணியாளர்களும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. எனவே இப்பணியாளர்களை ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.30/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 343 / குடிநீர் பணியன் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதிமன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 4</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு அரசாணை நிலைஎண் 10 நாள் 23.01.2023 ன் படி அனுமதிக்கப்பட்ட 2 பணிஆய்வர் பணியிடமும் காலியாக உள்ளது. தற்போது விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் ரூ.29.51 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அப்பணி மேற்கொள்ளும் இடங்களில், பணியின் தரத்தினை ஆய்வு செய்து, தரத்தினை உறுதி செய்யவும் தொழில்நுட்ப உதவியாளர் ஒரு எண்ணம் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது.அதன் அடிப்படையில் மேற்கண்ட தொழில்நுட்ப உதவியாளர் 1 எண்ணம் அமைப்பியல் பொறியியல் பிரிவில் பட்டபடிப்பு கல்வி தகுதியுடன் ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.20/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

தற்போது நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு திட்ட ப்பணியின் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டும், நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அலுவவகம் மற்றும் மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் இருந்து பெறப்படும் அறிவுரையின் படி திட்டக்கருத்தரு தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியிதின் அவசியம் கருதி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 1.20/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 344 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/-**

**திரு.எஸ்.பி.எம்.செல்வசுரேஷ்பெருமாள்**

**நகர்மன்றத் தலைவர்**

**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி**